மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.201/2011</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 09ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>09.02.2026 பி.வா.சா.4 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>18, 38 முதல் 40 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு சொத்தில் எங்கள் குடும்பத்திற்கு எத்தனை ஏக்கர் பூமி பாத்தியப்பட்டது என்றால் 4 ஏக்கர் 66 சென்ட் பூமிகள் பாத்தியப்பட்டது. மேற்படி பூமிகளை நாங்கள் எவ்வாறு அனுபவம் செய்து வருகிறோம் என்றால் பொதுவில் வைத்து தான் அனுபவம் செய்து வருகிறோம். 18ம் பிரதிவாதியான கே.ஆர்.சாமியப்பன் என்பவர் கிரைய வழியில் தாவா சொத்துக்களில் எவ்வளவு பூமியை கிரயம் பெற்றுள்ளார் என்பதை எனக்கு தெரியுமா என்றால் 2–1/4 ஏக்கர் என்று நினைக்கிறேன். சாமியப்பன் எந்த வருடம் கிரயம் வாங்கினார் என்றால் 2010 ஆம் ஆண்டு கிரயம் பெற்றார்.

2. சாமியப்பன் என்ன கண்டு கிரயம் பெற்றுள்ளார் என்றால் பொதுவில் என்று கண்டு தான் கிரயம் வாங்கி உள்ளார். சாமியப்பன் தனது கிரைய ஆவணத்தில் பொதுவில் என்று கண்டு தான் கிரயம் பெற்றுள்ளார்

செக்பந்திகள் கண்ட கிரயம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல சாமியப்பன் நாளதுதேதி வரை பொதுவில்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கில் 20ம் பிரதிவாதி பொன்னுச்சாமிக்கு கிரைய வகையில் தான் சொத்துக்கள் பாத்தியம் என்றால் சரிதான் அவரும் பொதுவில் என்று கண்டு தான் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 20ம் பிரதிவாதியின் வாரிசுகள் தான் இந்த வழக்கில் உள்ள 38 முதல் 40 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்தான 93 ஏக்கர் பூமியில் எனது தாத்தா எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 1959 ஆம் ஆண்டு கிரயம் வாங்கினார். இந்த வழக்கின் வாதிகள் பொன்னுச்சாமி மற்றும் குழந்தைசாமி ஆகியோர் மேற்படி 93 ஏக்கர் பூமியில் எப்போது கிரயம் வாங்கினார்கள் என்றால் 1974 ஆம் ஆண்டு கிரயம் வாங்கினார்கள். தாவா சொத்தை பொறுத்து இதுவரை பாகஸ்தர்களுக்குள் எந்த பாகப்பிரிவினையும் நடைபெறவில்லை என்றால் சரிதான். என் தாத்தா கோவிந்தசாமி கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 2016ல் இறந்தார். அவரை இந்த வழக்கில் 15 ஆம் பிரதிவாதியாக கட்சி சேர்த்திருந்தார்கள் என்றால் சரிதான்.

2. என் தாத்தா இறக்கும் வரை சொத்துக்களை எவ்வாறு அனுபவம் செய்து வந்தார் என்றால் பொதுவில் தான் அனுபவம் செய்து வந்தார் எங்கள் குடும்பத்திற்கு தாவா சொத்துக்களில் மொத்தம் எத்தனை விஸ்தீரணம் உள்ளது என்றால் 4 ஏக்கர் 66 சென்ட் பூமிகள் பாத்தியம் உள்ளது. தாவா சொத்துக்களை பொருத்து எந்தவிதமான பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணங்களோ வாய்மொழி

பாகப்பிரிவினைகளோ ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களில் எங்களுக்கு உண்டான விகிதாச்சார பங்கை எங்களுக்கு பிரித்துக் கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் வாதிக்கு உண்டான 14 ஏக்கர் பூமிகளை அவர்களுக்கு பிரித்துக் கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று சொன்னால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.09 18:12:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்